

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

தமிழாய்! தமிழனாய்!! தமிழ்மொழிக்காய்!!!

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936



www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil

♦ பதிப்பு : நாகர்கோவில் ♦ 25.10.2026 ♦ மலர் 04 ♦இதழ்: 297 ♦ ஞாயிறு

♦Edition : Nagercoil ♦24.10.2026 ♦Vol : 04 ♦Issue : 297 ♦Page : 4 ♦Rs. 5/-


தேனி, திண்டுக்கல், மதுரைக்கு ரெட் அலர்ட்

சென்னை: வங்கக் கடலில் நிலவும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தேனி, திண்டுக்கல், மதுரை மாவட்டங்களுக்கு நாளை (அக்.25) அதி கனமழைக்கான ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மத்திய கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் நில விய காற்றழுத்த தாழ்வு பகுதி 'ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்றுள் ளது. இது மேலும் வலுப் பெற்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக அதே பகுதிக ளில் நிலவக்கூடும்.

மேலும் இது மேற்கு, வட மேற்கு திசையில் நகர்ந்து வலுப்பெற்று, (அக்.25) ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும், 26ம் தேதி மத்திய மேற்கு வங்கக கடல் பகு திகளில் புயலாகவும் மாறக்கூ டும். இது மேலும் மேற்கு, வட மேற்கு திசையில் நகர்ந்து, மேலும் வலுப்பெற்று மத்திய மேற்கு வங்க கடல் பகுதிக ளில் ஆந்திரப் பிரதேச கடலோ ரப்பகுதிக்கு அருகில் 28ம் தேதி காலை நகரக்கூடும்.

இதன் காரணமாக, தமிழகத் தில் இன்று (அக்.24) நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்க ளில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய அதி கன மழை பெய்யக்கூடும் என ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. விழுப் புரம், கடலூர், திருவாரூர், தஞ் சாவூர், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் கன முதல் மிக கனமழை பெய் யக்கூடும் என ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. திரு வள்ளூர், சென்னை, செங்கல் பட்டு, காஞ்சிபுரம், ஈரோடு,



தேனி, மதுரை, குமரி உள் ளிட்ட மாவட்டங்களில் கன மழை பெய்யக்கூடும்.

ரெட், ஆரஞ்சு அலர்ட்...

தமிழகத்தில் (அக்.25) தேனி, திண்டுக்கல், மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங் களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய அதி கனமழை (ரெட் அலர்ட்) பெய் யக்கூடும்.

கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர், திருச்சி, கரூர், நீலகிரி, கோவை, திருப்பூர் மற்றும் சிவ கங்கை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் ஓரிரு இடங்களில் இடி, மின் னல் மற்றும் பலத்த காற்றுட னான கூடிய கன முதல் மிக கன மழை (ஆரஞ்சு அலர்ட்) பெய் யக்கூடும்.

திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், ராணிப்பேட்டை, தி ரு ப் ப த் தூ ர் , திருவண்ணாமலை, நாமக் கல், சேலம், தருமபுரி, கிருஷ் ணகிரி, ஈரோடு, விருதுநகர் மற்றும் கன்னியாகுமரி மாவட் டங்களில் கன மழை பெய்யக் கூடும். தென்காசி, தூத்துக்குடி, ராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் இடி, மின் னல் மற்றும் பலத்த காற்றுட னான கூடிய மிதமான மழை பெய் யக்கூடும்.

அக்.26ம் தேதி சிவகங்கை, ராமநாதபுரம் மற்றும் புதுக் கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின் னல் மற்றும் பலத்த காற்றுட னான கூடிய மிதமான மழை பெய் யக்கூடும்.

அக்.26ம் தேதி சிவகங்கை, ராமநாதபுரம் மற்றும் புதுக் கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின் னல் மற்றும் பலத்த காற்றுட னான கூடிய மிதமான மழை பெய் யக்கூடும்.

நீலகிரி, கோவை, தேனி, மதுரை, திண்டுக்கல், விருதுந கர், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக் குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும், இதர தமிழகத்தில் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகு திகளில் (அக்.25) வானம் ஓர ளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான அல்லது கன மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத் தில் பதிவான மழை அளவுக ளின்படி அதிகபட்சமாக நீல கிரி மாவட்டம் பர்லியாரில் 25 செ.மீ, கீழ் கோத்தகிரி எஸ் டேட்டில் 20 செ.மீ, குன்னூ ரில் 17 செ.மீ, அழகரை எஸ் டேட்டில் 16 செ.மீ, கோவை மாவட்டம் மேட்டுப்பாளை யத்தில் 15 செ.மீ மழை பதிவா கியுள்ளது என்று செய்திக்கு றி ப் பி ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'அர்னாப்' புயல்: வங்கக்கட லில் நிலவும் ஆழ்ந்த காற்ற முத்ததாழ்வுப் பகுதி 26ம் தேதி புயலாக வலுப்பெற உள்ளது. இந்த புயலுக்கு 'அர்னாப்' என பெயரிடப்பட உள்ளது. இந்தப் பெயரை வங்கதேசம் பரந் துரை செய்துள்ளது.

அர்னாப் என்ற சொல்லுக்கு வங்க மொழியில் பெருங்க டல் என்று பொருள்.

அதற்கு அடுத்து உருவாகும் புயலுக்கு இந்தியா பரிந்து ரைத்த 'முரசு' என தமிழ்ப் பெயர் வைக்கப்பட உள்ளது என சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் வி.ஆர்.துரை தெரி வித்துள்ளார்.

கேரளா நவராத்திரி விழாவிற்கு சென்று திரும்பிய சாமி சிலைகளுக்கு களியக்காவிளையில் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு



களியக்காவிளை, அக்.25

இந்த ஆண்டுக்கான நவராத்திரி விழா கடந்த 12ஆம் தேதி தொடங்கி 10நாட்கள் நடைபெறது. இதனையடுத்து சுசீந்திரம் முன்னுதித்த நங்கை அம் மன் குமாரகோவில் முரு கன் பத்மநாபபுரம் அரண் மனை தேவாரக்கட்டு சரஸ்வதியம்மன் விக்ர கங்கள் பத்மநாபபுரம் அரண்மனையில் இருந்து பாரம்பரிய முறைப்படி மன்னர் உடைவாள் மாற்றி இரு மாநில போலீஸ் மரியாதையு டன் கேரளா மாநிலம் திரு வனந்தபுரத்திற்கு வழிய னுப்பி வைக்கும் நிகழ்வு கடந்த 9தேதி காலை ந டை பெ ற் ற து . 11ம் தேதி ஊர்வலமாக சென்று இரவு திருவனந்தபுரம் கிழக்கே கோட்டை நவராத்திரி மண்டபத்தில் சென்ற டைந்தது. பின்னர் 12 தேதி முதல் பத்து நாள் நவராத்திரி பூஜையில் சாமி விக்ரங்கள் பங்கெ டுத்த பின்னர் 23ஆம் தேதி குமரி மாவட்டத் தி ற் கு , தி ரு வ னந் த பு ர த் தி ல் இருந்து ஊர்வலமாக புறப்பட்ட சாமி விக்கிரகங்கள் நெய்யாற் றின் கரை ஸ்ரீ கிருஷ்ண சாமி கோவிலில் தங்கல் நிகழ்ச்சியும் நடைபெற் ற து .

இந்நிலையில் நேற்று 24ம் தேதி மாலை 4 மணி அளவில் குமரி கேரளா எல்லை பகுதியான களி யக்காவிளையில் தமிழக தேவசம்போர்டு அதிகாரி யிடம் ஒப்படைப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கேரளா தேவசம் போடு அதிகாரி கள் மற்றும் தமிழக இந்து அறநிலையத்துறை அதி காரிகள் உட்பட ஏராளமா னோர் கலந்து கொண்ட னர். தொடர்ந்து தமிழக கேரளா போலீசாரின் அணிவகுப்புநிகழ்ச்சியும் நடைபெற்றது. பின்னர் ஊர்வலமாக சென்ற சாமி விக்ரங்கள் குழித்துறை மகாதேவர் ஆலய வளா கத்தில் தங்கல் நிகழ்ச்சியும் நடைபெற் றது. பின்னர் இன்று 25ம் தேதி காலை அங்கிருந்து ஊர்வலமாக புறப்பட்டு அந்தந்த கோயில்களுக்கு அனுப்பி வைக்கப்படு கிறது.

விளாத்திகுளம் அருகே ரூபாய் 30 லட்சம் மதிப்பிலான தடை செய்யப்பட்ட நாட்டுக்கருவேல மரங்கள் வெட்டி கடத்தல்



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள செங்கோட்டை மற்றும் பட் டித்தேவன்பட்டி ஆகிய இரு கி ரா ம ங் க ளு க் கு ம் பாத்தியப்பட்ட சுமார் 280 ஏக் கர் பரப்பளவில் கிராம பஞ்சா யத்து கண்மாய் உள்ளது, இக் கம்மாயில் உள்ள சீமை கருவேல மரங்களை வெட்டு வதற்கு இரு கிராமங்களை சேர்ந்த மக்களிடம் அரசு ஒப் பந்தம் கேட்பது வழக்கம், அப் படி அரசால் ஒப்பந்தம் கேட் கப்பட்டு அரசு உண்டான தொகையை செலுத்திய பின் சீமை கருவேல மரங்களை வெட்டுவது வழக்கம், இந்த நிலையில் செங்கோட்டை மற்றும் பட்டித்தேவன்பட்டி ஆகிய இரு கிராம மக்களிடம் அரசு சார்பில் எந்த ஒரு ஒப் பந்த கோரிக்கையும் கேட்கா மல், வேறு பகுதியை சேர்ந்த ஒரு சிலர் அரசு அதிகாரிகளின் துணையுடன் சீமை கருவேல மரங்களை வெட்டுவது மட்டு மல்லாமல் அரசால் தடை செய்யப்பட்ட நாட்டு கரு வேல மரங்களையும் வெட்டி கடத்தி வந்துள்ளனர், இதனை அடுத்து தகவல் அறிந்த செங் கோட்டை மற்றும் பட்டித்தே வன்பட்டி இரு கிராமங்களை சேர்ந்த மக்கள் உரிய அனும தியில்லாமல் இப்பகுதியில் மரங்களை வெட்டக்கூடாது என்று, வாகனங்களை மறித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டு அரசு அதிகாரிகளுக்கு தகவல் தெ ரி வி த் து ள் ள ன ர் . இந்த நிலையில் காலை தொடர்ந்து அதே கண்மாயில் அரசு அதிகாரிகளின் துணையு டன் வேலையாட்களை வைத்து சீமைகருவேல மரங் கள் மற்றும் நாட்டுக் கருவேல மரங்களை வெட்டி கடத்தும் முயற்சியில் ஈடுபட்டபோது கிராம மக்கள் வாகனங்களை வழிமறித்து வாக்குவாதத்தில் ஈ டு ப ட் ட ன ர் . இதுகுறித்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சசிகுமார் மற் றும் தனலட்சுமி ஆகிய இருவ ருக்கும் தகவல் தெரிவித்தும் சம்பவ இடத்திற்கு வருகி றேன் வருகிறேன் என்று கூறி யவர்கள் கடைசி வரை வர வில்லை என்று கிராம மக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். இதுகுறித்த கிராம மக்கள் கூறுகையில் விவசாயிகளுக்கு தொல்லை கொடுத்து வரும் மான்கள் மற்றும் பன்றிகள் இருப்பிடமாக உள்ள சீமை கருவேல மரங்களை அகற்ற மட்டுமே அரசு உத்தரவிட் டுள்ளது, நாட்டு கரு வேல மரங்களை வெட்ட எந்த அர சும் உத்தரவு பிறப்பிக்கவில்லை, அரசுக்கு சுமார் 30 லட்சம் ரூபாய் வரு வாய் இழப்பு ஏற்படுத்தியவர் கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அக் கிரம மக்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த சட்டவிரோதமாக நாட் டுக்கருவேல மரங்களை வெட்டி அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியது குறித்து, வட்டார வளர்ச்சி அலுவலர்களை தொலைபே சியில் தொடர்பு கொண்ட போது, அவர்கள் தொலைபே சியை எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

குமரி கிழக்கு மாவட்ட அஜய் வாண்டையார் அறக்கட்டளையின் தலைவராக பில்லா அஜித் நியமனம்

நாகர்கோவில் அக் 25

அஜய் வாண்டையார் அறக்கட்டளை நிறுவனத் தலைவர் அஜய் வாண் டையார் குமரி கிழக்கு மாவட்ட தலைவரை அறி வித்து வெளியிட்டுள்ள நியமன கடிதத்தில் கூறியிருப்பதாவது :

கன்னியாகுமரி கிழக்கு அஜய் வாண்டையார் அறக்கட்டளையின் தலை வராக பில்லா அஜித்தை இக்கடிதத்தின் மூலம் நிய மனம் செய்கிறோம்.



மேலும் அறக்கட்டளையின் நோக் கங்கள் மற்றும் மக்கள் நலப் பணிகளை மாவட்ட அளவில் சிறப்பாக முன் னெடுத்துச் செல்லவும், மாவட்ட நிர்வாகத்தை ஒ ரு ங் கி ணை க் க வு ம் , பொதுமக்களுக்கு தேவை யான நலத்திட்ட உதவிக ளைச் செயல்படுத்தவும் இந்த பொறுப்பு வழங்கப் ப ட் டி ரு ப் ப தா க வு ம் , இதில் நேர்மையுடனும், அர்ப்ப ணிப்புடனும், பொறுப்பு ணர்வுடனும் செயல்பட வு ம் அறிவுரை வழங்கப்பட் டுள்ளதாக அதில் கூறப் பட்டுள்ளது.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில் அகமுடையார் நலச் சங்கம் சார்பில் மாமன்னர் மருது பாண்டியர்களின் 225வது குருபூஜை விழா சிறப்பாக நடைபெற்றது. சங்கத் தலைவர் நல்லாசிரியர் ஆர். தர்மலிங்கம் தலைமை வகித்தார். விழாவில் ஓய்வுபெற்ற டி.எஸ்.பி. சிவலிங்கம், எஸ்.ஐ. கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர். பத்தாம் மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத்தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்குக் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

மேலும், மருது பாண்டியர்களின் நினைவைப் போற்றும் வகையில் நடைபெற்ற இவ்விழாவில், சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் 1,000 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

குழித்துறை தாலுகா அரசு மருத்துவமனையில் அடிப்படை வசதிகள் கேட்டு பாஜகவினர் சத்தியாகிரக போராட்டம்



மார்த்தாண்டம், அக், 25

குழித்துறை அரசு தாலுகா மருத்துவமனை யில் போதுமான மருத்து வர்கள் மற்றும் பணியாளர் கள் இல்லாத காரணத்தால் நோயாளிகள் கடும் அவ திக்குள்ளாகி வருவதாக வும், கட்டிட வசதி, நவீன மருத்துவ கருவிகள், குறை வான அளவில் தற்காலிக பணியாளர் ளை வைத்து செயல்பட்டு வருவதை கண்டித்தும், அங்கு சிகிச் சையாக வருகின்ற நோயா ளிகளுக்கு அரசு தரமான மருத்துவம் வழங்கதமிழக அரசு உறுதி அளிப்பது உட் பட பல்வேறு கோரிக்கை களை வலியுறுத்தி மருத்து வமனையின் முன்பு குமாரி மேற்கு மாவட்ட பாஜக சார்பில் சத்தியாகிரக போராட்டம் நடைபெற் ற து .

போராட்டத்திற்கு குமரி மேற்கு மாவட்ட பாஜக தலைவர் சுரேஷ் தலைமை தாங்கினார். போராட்டத் தில் உண்ணாமலை கடை முன்னாள் பேரூராட்சி தலைவர் ஜெயசீலன், குழித்துறை நகர பாஜக தலைவர் சுமன், குழித் துறை நகர்மன்ற கவுன்சி லர்கள் விஜூ, ரெத்தின மணி, பாஜக மாவட்ட பொது செயலாளர் நந்தினி, மாவட்ட இளைஞரணி தலைவர் சுபின் ராஜ், முன் னாள் மாநில இளைஞரணி செயலாளர் சஜு, சுகுமாரன், வழக்கறிஞர் சுரேஷ் உட் பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். போராட்டத் தில் மருத்துவத் துறைக்கு எதிராகவும் தமிழக அரசு எதிராகவும் கோஷங்கள் எழுப்பப்பட்டது.

கன்னியாகுமரி அருகே ஆட்டோ பைக் மோதல்; ஒருவர் பலி

கன்னியாகுமரி, அக். 25

கன்னியாகுமரி நான்கு வழிச் சாலையில் முருகன் குன்றம் அருகே ஆட்டோ வும் பைக்கும் நேருக்கு நேர் மோதியதில் இளை ஞர் உயிரிழந்தார். தகவலறிந்த கன்னியாகு மரி போலீசாரும் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். மு த ற் க ட் ட விசாரணையில், உயிரிழந் தவர் கன்னியாகுமரியை அடுத்த ஆரோக்கியபுரத் தைச் சேர்ந்த பிரபாகரன் வல்லோரியான் (44), மீன் பிடி தொழில் செய்து வரு கிறார். இவர் நேற்று தனது பைக்கில் மகாதானபுரம் ரவுண்டானா பகுதியில் இருந்து முருகன் குன்றம் நோக்கி சென்றுள்ளார். அப்போது எதிரே வந்த ஆட்டோ நேருக்கு நேர் மோதியதில் பிரபாகரன் தூக்கி வீசப்பட்டு தலை யில் பலத்த காயம் ஏற் பட்டு சம்பவ இடத்தி லேயே உயிரிழந்தார். போலீசார் உடலை கைப் பற்றி பிரேத பரிசோத னைக்காக ஆசாரிப்பள் ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவம னைக்கு அனுப்பி வைத்த னர். மேலும் இது குறித்து போலீசார் தொடர்ந்து விசாரணை மேற் கொண்டு வருகின்றனர்.

60 ஆண்டுகள் பழமையான புதுக்கடை தபால் நிலையம் மழையில் உட்புற சீலிங் இடிந்தது

புதுக்கடை, அக்.25

60 ஆண்டுகள் பழமை வாய்ந்த புதுக்கடை தபால் நிலைய கட்டிடம் தொடர் மழையினால் மேற்பகுதி (சீலிங்) இடிந்து விழுவதால் அலுவலர்கள் உயிரே கையில் பிடித்து வேலை பார்க்கும் அவல நிலையிலுள்ளனர். மார்த்தாண்டம் தேங்காப்பட் டணம் சாலையில் மிக முக் கிய சந்திப்பாக புதுக்கடை உள்ளது. இந்த சந்திப்பில்ல் பஸ் நிலையம், மார்க்கெட், ஏராளம் கடைகள் உள்ளது. இதனால் பொதுமக்கள் அதி கம் வரும் பகுதியாக புதுக் கடை பகுதி உள்ளது.

இந்த நகரின் மையப் பகு தியில் தபால் நிலையம் செயல்பட்டு வருகிறது. கடந்த காலங்களில் இந்த தபால் நிலையம் இப்பகுதி மக்களின் மிக முக்கிய கடித போக்குவரத்து மையமாகவும் விளங்கி வந்தது. இந்த கட்டி டம் ஆனது 60 ஆண்டுகள் பழமை வாய்ந்த பாழடைந்த கட்டிடத்தில் செயல்பட்டு வ ரு கி ற து .

இந்த நிலையத்தின் கீழ் மணவி , செறுகரை, அம்பாள் நகர், மேப்பாட்டு விளை, பார்த்தி வபுரம், மேலங்கலம் போன்ற ஏராளமான குக்கிராமங்களை சேர்ந்த மக்க ளின் தபால் சேவை செய்யும் அலுவலகமாக புதுக்கடை தபால் அலுவலகம் உள்ளது. தற்போதும் தினமும் சேமிப்பு கணக்கில் பணம் கட்டுவதற் கும் ,பதிவு தபால் அனுப்புவ தற்கும் ஏராளமான மக்கள் வருவார்கள். குறிப்பாக ஆதார் சேவை திருத்த மையம் இங்கு செயல்பட்டு வருவதால் காலையிலிருந்து இங்கு பொது மக்களின் கூட்டம் அதி கமாக இருக்கும். ஆனால் கட்டிடத்தின் நிலையோ மிக வும் பரிதாபமாக உள்ளது. கட் டடத்தின் மேற்கூரைகள் தற் பொழுது பெய்து வரும் தொடர்மழையில் உடைந்து கீழே விழுகிறது. சிமின்ட் சிலாப்புகளாக சிதறி விழுகி றது. இதனால் ஆதார் எடுத்துக் கொண்டிருக்கும் மக்களும் அலறியடித்து ஓடுவதும் வாடிக்கையாக நடந்து வருகி றது. இதனால் ஆதார் சேவை திருத்த மையத்திற்கு வரும் பொ து ம க் க ளு ம் குழந்தைகளும் அச்சத்தில் உ ள் ள ன ர் .

இந்த நிலையில் நேற்று மதியம் மழை பெய்த போது மீண்டும் அலுவலக உள்ளே கூரைசீலிங்சிமின்ட்பெயர்ந்து விழுந்தது. ஆனால் யாருக்கும் ஆபத்து ஏற்படவில்லை. இந்த தபால் நிலையத்துக்கு புதிய கட்டிடம் கட்ட வேண் டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக நிலுவையில் உள் ளது ஆகவே தபால் துறையி னர்

இந்த பழமை வாய்ந்த தபால் நிலைய கட்டடத்தை இடித்து புதிய கட்டிடம் கட்ட வேண்டும் என்பதை இப்ப குதி மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

பாலக்கோடு பேரூராட்சி அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புப் போலீசார் அதிரடி சோதனை

கணக்கில் வராத ரூ.59 ஆயிரம் ரொக்கம் பறிமுதல்



தருமபுரி அக்டோபர் 25

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு பேரூராட்சி அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புப் போலீசார் நடத்திய திடீர் சோதனையில், கணக்கில் வராத ரூ.59 ஆயிரம் ரொக்கப் பணம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மேலும், பேரூராட்சி அலுவலக ஊழியர் ஒருவரின் ஜிபே கணக்கில் பெறப்பட்டதாகக் கூறப்படும் 1 லட்சத்து 33 ஆயிரத்து 540 ரூபாய் தொடர்பான பணப் பரிவர்த்தனைகள் குறித்தும் அதிகாரிகள் தீவிர விசாரணை மேற்கொண்டனர். ஐந்து மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற இந்தச் சோதனையால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. தருமபுரி மாவட்டம், பாலக்கோடு பேரூராட்சி அலுவலகத்தில் கட்டிட அனுமதி வழங்குதல், குடிநீர் இணைப்பு பெறுதல் உள்ளிட்ட பணிகளுக்காக லஞ்சம் கேட்கப்படுவதாக லஞ்ச ஒழிப்புத் துறை போலீசாருக்கு ரகசியப் புகார்கள் வந்ததாகக் கூறப்படுகிறது. இதன் அடிப்படையில், தருமபுரி லஞ்ச ஒழிப்புத் துறை துணைக் காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் மற்றும் காவல் ஆய்வாளர் பெருமாள் தலைமையிலான போலீசார், பாலக்கோடு பேரூராட்சி அலுவலகத்தில் நேற்று மாலை திடீர் சோதனையில் ஈடுபட்டனர். இந்தச் சோதனையின் போது, அலுவலகத்தின் முக்கிய ஆவணங்கள், கோப்புகள் மற்றும் பணப் பரிவர்த்தனை தொடர்பான ஆவணங்களை போலீசார் ஆய்வு செய்தனர். அலுவலகத்தில் இருந்த பணம் மற்றும் வரவு, செலவு கணக்குகள் குறித்தும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேலும், சோதனை நடைபெறுவது வெளியே தெரியாத வகையில் அலுவலகத்தின் ஜன்னல்கள் மற்றும் கதவுகளுக்குத் திரைகள் போட்டு மூடப்பட்டன. பொதுமக்கள் யாரும் அலுவலகத்திற்குள் அனுமதிக்கப்படவில்லை. இதனால், பேரூராட்சி அலுவலக வளாகத்தில் பரபரப்பான சூழல் நிலவியது. ஐந்து மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற இந்தச் சோதனையின் முடிவில், உரிய கணக்கில் காட்டப்படாததாகக் கூறப்படும் ரூ.59 ஆயிரம் ரொக்கப் பணத்தை லஞ்ச ஒழிப்புப் போலீசார் பறிமுதல் செய்தனர். இதனைத் தொடர்ந்து, பேரூராட்சி அலுவலக ஊழியர் ஒருவரின் ஜிபே கணக்கில் சுமார் 1லட்சத்து 33 ஆயிரத்து 540 ரூபாய் பெறப்பட்டதாகக் கூறப்படும் ஆன்லைன் பணப் பரிவர்த்தனைகள் குறித்தும் போலீசார் விசாரணை மேற்கொண்டனர். இந்தப் பணப் பரிவர்த்தனைகள் எதற்காக மேற்கொள்ளப்பட்டன? யாரிடமிருந்து பணம் பெறப்பட்டது? பேரூராட்சி அலுவலகப் பணிகளுக்கும் இந்தப் பரிவர்த்தனைகளுக்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா? என்பது உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் விசாரணை நடைபெற்றது. இதுதொடர்பாக, பேரூராட்சி செயல் அலுவலர் செந்தில்குமார் மற்றும் கணக்காளர் பத்மாவதி ஆகியோரிடமும் லஞ்ச ஒழிப்புப் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர். பேரூராட்சி அலுவலகத்தில் கணக்கில் வராத பணம் பறிமுதல் செய்யப்பட்டதும், ஆன்லைன் பணப் பரிவர்த்தனைகள் குறித்து விசாரணை நடைபெறுவதும் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராஜாக்கமங்கலம் அருகே போலி பாஸ்போர்ட் எடுக்க முயன்ற இலங்கை அகதி கைது



ராஜாக்கமங்கலம், ஆக 25

ராஜாக்கமங்கலம் அருகே பழவிளை பகுதியில் இலங்கை அகதிகள் முகாம் உள்ளது. இங்கு வசித்து வருபவர் சிவானந்தன் மகன் ஹரிஹரன் (வயது 29). இவர் திங்கள் சந்தையில் உள்ள ஒரு கடையில் வேலை பார்த்து வந்தார். இவர் வெளிநாடு செல்வதற்காக முயற்சி செய்தும் வந்துள்ளார். இதற்காக போலியான வாக்காளர் அடையாள அட்டையை தயார் செய்துள்ளார். மேலும் ஆதார் அட்டையின் பின்புறம் உள்ள முகவரியையும் போலியாக திருத்தி, பாஸ்போர்ட் பெற விண்ணப்பித்துள்ளார். நாகர் கோவில் பாஸ்போர்ட் அலுவலகத்தில் ஆவணங்கள் சரிபார்ப்பின் போது அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. இதையடுத்து போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவலின் பேரில் போலீசார் விசாரணை நடத்தியதில், ஹரிஹரன் பழவிளை அகதிகள் முகாமில் வசித்து வந்த நிலையில், போலி ஆவணங்களை பயன்படுத்தி பாஸ்போர்ட் பெற்று வெளிநாடு செல்ல திட்டமிட்டிருந்தது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் ஹரிஹரனை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இவர் வெளிநாட்டுக்கு செல்ல ஏஜெண்டுகளிடம் ரூபாய் மூன்று லட்சம் வரை கொடுத்து வைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. அவருக்கு போலியான ஆவணங்கள் தயார் செய்து கொடுக்க யார் யார் உதவி செய்துள்ளார்கள் என்பது குறித்தும் போலீசார் விசாரணை நடத்துகின்றனர்._

நாகர்கோவில் அருகே விஷம் குடித்த போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் உயிரிழப்பு

ராஜாக்கமங்கலம், அக. 25

நாகர்கோவில் அருகே பாம்பன்விளை பகுதியைச் சேர்ந்தவர் ராஜன் (வயது 55) காவல்துறை சிறப்பு சப்இன்ஸ்பெக்டர். இவர் நாகர்கோவில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு முகாம் அலுவலகத்தில் வேலை பார்த்து வந்தார். இவர் குடும்ப பிரச்சனை காரணமாக கடந்த 16ம் தேதி இரவு, திடீரென விஷம் குடித்து வீட்டில் மயங்கி விழுந்தார். உறவினர்கள் அவரை மீட்டு சிகிச்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் அவர் நேற்று சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இது குறித்து தகவல் அறிந்த ராஜாக்கமங்கலம் போலீசார் அவரது உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனை பிணஅறைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோத்தகிரி அருகே காட்டு யானை தாக்கி இளைஞர் உயிரிழப்பு!

பாட்டியைப் பார்க்கச் சென்றபோது பரிதாபம்

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி அருகே உள்ள கூக்கள்தொறை பகுதியில் காட்டு யானை தாக்கியதில் பிரவீன்குமார் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கோயம்புத்தூரைச் சேர்ந்த பிரவீன்குமார், தனது பாட்டியைப் பார்ப்பதற்காக கூகல் தொறை பகுதிக்குச் சென்றிருந்த போது, அங்கு எதிர்பாராத விதமாக காட்டு யானை தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் பலத்த காயமடைந்த அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதையடுத்து, உயிரிழந்த பிரவீன்குமாரின் உடல் மீட்கப்பட்டு, பிரேதப் பரிசோதனைக்காக கோத்தகிரி அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இச்சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. வனப்பகுதிகளை ஒட்டியுள்ள குடியிருப்புப் பகுதிகளில் காட்டு யானைகளின் நடமாட்டத்தைக் கண்காணித்து, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வனத்துறையினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

குன்னூர் – மேட்டுப்பாளையம் சாலையில் ஆங்காங்கே மண் சரிவு! நள்ளிரவு 12 மணி முதல் போக்குவரத்துக்குத் தடை!



நீலகிரி மாவட்டம்: குன்னூர் – மேட்டுப்பாளையம் சாலையில் ஆங்காங்கே ஏற்பட்ட மண் சரிவால், இரவு 12 மணி முதல் வாகனப் போக்குவரத்து தடைபட்டது. இதனால் சாலையின் இருபுறங்களிலும் வாகனங்கள் நீண்ட வரிசையில் அணிவகுத்து நின்றன.

மண் சரிவால் போக்குவரத்து பாதிக்கப்பட்ட நிலையில், தீயணைப்புத் துறையினர், காவல்துறையினர் மற்றும் அருகில் வசிக்கும் உள்ளூர் பொது மக்கள் விரைந்து செயல்பட்டு,

சாலையைச் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மண் சரிவை அகற்றி போக்குவரத்தை மீண்டும் சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதால், வாகன ஓட்டிகள் பாதுகாப்புடன் பயணிக்கவும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேனி மாவட்டத்துக்கு ஆரஞ்சு எச்சரிக்கை: 65 நிவாரண முகாம்கள் தயார் – ஆட்சியர் தகவல்



தேனி: தேனி மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில் , வரும் 26ம் தேதி வரை கனமழை பெய்ய வாய்ப்புள்ளதால் ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் வ.சிவகிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

கடந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் 335.40 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. அதிக மழைப்பொழிவு ஏற்படக்கூடிய பகுதிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் ஏற்கெனவே கண்டறியப்பட்ட 45 பாதிப்புக்குள்ளாகக்கூடிய பகுதிகளில் வருவாய்த் துறை, காவல்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்பினர் இணைந்து கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். பொதுமக்களைப் பாதுகாப்பாகத் தங்க வைக்க 65 நிவாரண முகாம்கள் தயார் நிலையில் உள்ளன.

மலைப் பகுதிகளில் உள்ள 48 நியாயவிலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ள 20 இடங்களில் கூடுதல் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு, 2,700 மணல் மூட்டைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

கனமழையால் இதுவரை 10 வீடுகள் பகுதியாகவும், உத்தமபாளையத்தில் ஒரு வீடு முழுமையாகவும் சேதமடைந்துள்ளது. உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை. வைகை, பெரியாறு உள்ளிட்ட அணைகளின் நீர்மட்டம் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. தற்போதைய நிலவரப்படி, வெள்ளப் பெருக்கால் தாழ்வான பகுதிகள் பாதிக்கப்படும் சூழல் இல்லை என ஆட்சியர் தெரிவித்தார்.

பொதுமக்கள் ஆறுகள், ஓடைகள் மற்றும் நீர்நிலைகளுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும். பேரிடர் தொடர்பான புகார்களுக்கு 1077 அல்லது 04546261093 என்ற எண்களில் தொடர்புகொள்ளலாம்.

கோவை சைபர் கிரைமில் இளம் தொழிலதிபர் புகார்



கோவை, அக். 25

நடிகர் ரவி மோகன் மற்றும் Finance with Harish தொடர்பான விவகாரங்கள் சமூக வலைதளங்களில் பேசப்பட்டு வரும் நிலையில், தன்னையும் குறிவைத்து சைபர் புல்லியிங் நடைபெறுவதாக இளம் தொழிலதிபர் புகார் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக கோவை மாநகர சைபர் கிரைம் பிரிவில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

இளம் தொழிலதிபரான பார்த்திபன் கே. தனது தொழில் நிறுவனம் மற்றும் தனிப்பட்ட நற்பெயரைப் பாதிக்கும் வகையில் சமூக வலைதளங்களில் வீடியோக்கள், படங்கள் உள்ளிட்ட உள்ளடக்கங்கள் வெளியிடப்படுவதாகப் புகாரில் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதளங்கள் வாயிலாகத் தன்னை குறிவைத்து உள்ளடக்கங்கள் பரப்பப்படுவதாகவும், இதனால் தனது தொழில் மற்றும் வணிகச் செயல்பாடுகள் பாதிக்கப்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். இதுகுறித்து செய்தியாளர் சந்திப்பு கோவை ஆடிஸ் வீதியில் உள்ள பத்திரிகையாளர் மன்றத்தில் நடைபெற்றது.

மேலும், சமூக வலைதளங்களில் வெளியிடப்படும் பதிவுகள் தனது நற்பெயருக்கும், தன்னை நம்பியுள்ள வாடிக்கையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுடனான உறவுகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும் என அவர் கவலை தெரிவித்துள்ளார். குறிப்பிட்ட கோரிக்கைகளை நிறைவேற்றினால் மட்டுமே வீடியோக்களை வெளியிடுவதை நிறுத்துவதாக மிரட்டல் விடுக்கப்பட்டதாகவும் புகாரில் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக, இணையக் குற்றப் புகார் பதிவு செய்யப்பட்டதற்கான ஒப்புகை ஆவணம் இருப்பதாகக் கூறப்படுகிறது. சமூக வலைதளப் பதிவுகள் தொடர்பான ஆதாரங்களும் புகாருடன் இணைக்கப்பட்டுள்ளதாக அந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து உரிய விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்ட சமூக வலைதளப் பதிவுகள் மற்றும் டிஜிட்டல் ஆதாரங்களை ஆய்வு செய்ய வேண்டும் எனப் புகார்தாரர் கோரியுள்ளார். விசாரணையில் சட்டவிரோதச் செயல்கள் உறுதிப்படுத்தப்பட்டால், சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

விளாத்திகுளம் மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் ஐப்பசி மாத வளர்பிறை பிரதோஷ வழிபாடு



விளாத்திகுளம் அக்டோபர் 25.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் அமைந்துள்ள 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் ஐப்பசி மாத வளர் பிறை பிரதோஷத்தை முன்னிட்டு நந்திகேஸ்வரர் மற்றும் மீனாட்சி சுந்தரேஸ்வரருக்கு பால், தயிர், மஞ்சள், இளநீர், பன்னீர், சந்தனம், திருநீர் உள்ளிட்ட பல்வேறு வகையான அபிஷேகங்கள் செய்யப்பட்டது, அதனைத்தொடர்ந்து செவ்வரளி, மல்லிகை, வில்வ இலை உள்ளிட்ட பல்வேறு வண்ண மலர்களால் மாலை அணிவிக்கப்பட்டது. பிரதோஷ ரிஷப வாகனத்தில் எழுந்தருளி சந்திரசேகரர் உமா மகேஸ்வரி பக்தர்களுக்கு அருள் பாலித்தார், அதனைத்தொடர்ந்து சிவ நாமத்துடன் நந்திகேஸ்வரர் மற்றும் மீனாட்சி சுந்தரேஸ்வரருக்கு பஞ்சமுக தீபாதாரனை காண்பிக்கப்பட்டது.

இதில் விளாத்திகுளம் சுற்றுவட்டாரப் பகுதிகளை சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையின் பின்புறப் பாதையை திறக்க கோரிக்கை

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் பின்புறப் பாதை பல ஆண்டுகளாகப் பயன்பாட்டுக்கு முடக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால் அவசர மருத்துவச் சேவைக்காக ஆம்புலன்ஸ்கள் வந்து செல்லவும், நோயாளிகளை விரைவாக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லவும் சிரமம் ஏற்படுவாய்ப்புள்ளது. மருத்துவமனையின் பின்புறப் பாதையை மீண்டும் திறந்து, ஆம்புலன்ஸ்கள் தடையின்றிச் சென்று வரவும், பொதுமக்கள் அந்த வழியைப் பயன்படுத்தவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மருத்துவ அவசரநிலைகளில் ஒவ்வொரு நிமிடமும் முக்கியமானது என்பதால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப்பிரச்சினையில் உடனடியாக கவனம் செலுத்தி, பல ஆண்டுகளாக முடக்கப்பட்டுள்ள பின்புறப் பாதையைத் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

தமிழக முதல்வருக்கு நன்றி பாராட்டும், மண்ணின் மைந்தர்கள் சமூக நலன் அமைப்பு



சிவகங்கை, காரைக்குடிக்கு அருகே உள்ளது பள்ளத்தூர். இங்கு பேரூராட்சி நிர்வாகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வாரச்சந்தை செயல்பட்டு வருகிறது. இந்த சந்தையானது கட்டுமானப் பணிகள் புதுப்பிக்கப்பட்டு ஏலம் விடுவதற்கு தயாராகி வரும் நிலையில், ஏலம் விடுவதில் சிக்கல்கள் இருப்பதாக பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்து வந்தன, இந்த நிலையில் பள்ளத்தூர் பகுதியில் சமூக நலன் அமைப்பாக செயல்பட்டு வரும் மண்ணின் மைந்தர்கள் என்ற அமைப்பின் பொறுப்பாளர் ராம்குமார் என்பவர், தமிழக முதல்வர் தனி பிரிவிற்கு, மனு அளித்திருந்தார், மேலும் சிவகங்கை மாவட்ட பொறுப்பு மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் பிரபு திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் சீனிவாச சேதுபதி ஆகியோரிடம் எடுத்துரைத்ததாக கூறப்படுகிறது, இந்த நிலையில் வார சந்தையானது ஏலம் விடுவதில் அரசியல் தலையீடு, அல்லது தனிநபர் தலையீடு கூடாது என்றும், வியாபாரிகளிடம் வைப்புத் தொகை கூடுதல் பெறக் கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டதாக கூறப்படும் சுவரொட்டி பள்ளத்தூர் பகுதி முழுவதும் ஒட்டப்பட்டுள்ளது, இதில் தமிழக முதல்வர் மாண்புமிகு ஜோசப் விஜய், அமைச்சர் பிரபு, சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசா சேதுபதி ஆகியோர்களுக்கு நன்றி கூறி சுவரொட்டி ஒட்டப்பட்டுள்ளது, இதுகுறித்து மண்ணின் மைந்தர்கள் அமைப்பின் பொறுப்பாளர் ராம்குமார் கூறும் போது, மக்கள் நலனே, மண்ணில் மைந்தர்கள் அமைப்பின் ஒற்றை குறிக்கோளாக இருந்து வருவதாகவும், மக்களுடன் நின்று மக்கள் பிரச்சனையை தீர்வு காண்போம் என தெரிவித்தார்.

தமிழ் நாடு அரசு கூட்டுறவு துறை ஊழியர் சங்கம் சார்பில் ஈரோட்டில் ஆர்ப்பாட்டம்



ஈரோடு அக் 24

தமிழ்நாடு அரசுகூட்டுறவு துறை ஊழியர் சங்கம் சார்பில் ஈரோடு மையம் சார்பில் சூரம்பட்டி கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணை பதிவாளர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்ட தலைவர் இரா கிருபாகர் ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

மாவட்ட செயலாளர் சாகுல் ஹமீது கோரிக்கைகள் குறித்து விளக்கி பேசினார். முடிவில் மாவட்ட பொருளாளர் ஹசினா பானு நன்றி கூறினார். கூட்டுறவுதுறை குறித்த புரிதல் இல்லாமலும், கூட்டுறவு கொள்கைக்கு எதிராகவும் செயல்பட்டு, கூட்டுறவு சங்கங்களின் நிதி சீர்குலைவிற்கு காரணமாக உள்ள பதிவாளரை மாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது. அப்போது கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

ரெட் அலர்ட் எச்சரிக்கை:

கணபதிபுரம் லெமூர் கடற்கரைக்குச் சுற்றுலாப் பயணிகள் செல்லத் தடை

நாகர்கோவில் அக் 25 குமரி மாவட்டத்தில் ரெட் அலர்ட் விடுக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று காலை முதல் மாவட்ட கடற்கரைப் பகுதிகள் அனைத்தும் கடும் சீற்றத்துடன் காணப்பட்டன. கடல் அலைகள் பல அடி உயரத்திற்கு எழும்பி ஆக்ரோஷமாக வீசியதால், பொது மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் கடற்கரைக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டது. மாவட்ட நிர்வாகம் சார்பில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சுற்றுலாதளங்களுக்கு பொது மக்கள் யாரும் வரவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டது. ரெட் அலர்ட் காரணமாக மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தலின்படி கணபதிபுரம் லெமூர் பீச் சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டது.

கணபதிபுரம் பேரூராட்சி சார்பில் ரெட் அலர்ட்காரணமாக இன்று லெமூர் பீச் மூடப்படுவதாக என்று நோட்டீஸ் ஒட்டப் பட்டது.

அதிகாரிகளும் போலீசாரம் பொதுமக்கள் சுற்றுலா பயணிகள் தடுப்பு வேலி அமைத்து யாரும் வராத வகையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

விடுமுறை என்பதால் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் நாட்களில் பீச் மூடப்பட்டதால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர்.

களியக்காவிளையில் மதுபாரில் தொழிலாளி கொலை

தேடப்பட்ட வாலிபர் கோர்ட்டில் சரணடைந்தார்



களியக்காவிளை, அக், 25

களியக்காவிளை அருகே படத்தாலுமூடு மதுபான பாரில் தொழிலாளியை வெட்டி கொலை செய்த சம்பவம் தொடர்பாக மூன்று தனிப்படைகள் அமைக்கப்பட்டு தேடி வந்துள்ள நிலையில் கொலையாளி மணிகண்டன் இரணியல் கோர்ட்டில்சரண்அடைந்துள்ளார்.

கடந்த மாதம் படந்தாலு முடு மதுபான பாரில்மீளச்சல் பகுதியை சார்ந்த மணிகண்டன் அதே பகுதியை சார்ந்த ஜோசப் என்பவரை வெட்டு கத்தியால் வெட்டி படுகாயம் ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்றார். படுகாயம் அடைந்த ஜோசப்நீண்டநாள்சிகிட்சைக்குப் பிறகு ஆஸ்பத்திரியில் உயிரிழந்தார். இது தொடர்பாக களியக்காவிளை போலீசார் கொலை வழக்கை, கொலை வழக்காக பதிவு செய்து மணிகண்டனை தேடி வந்தனர்.

இந்த கொலை தொடர்பாக கொலையாழி மணிகண்டனை பிடிக்க குமரி மாவட்ட எஸ்பி அன்ஷில் நாகர் உத்தரவின் பேரில் களியக்காவிளை இன்ஸ்பெக்டர் பரமேஸ்வரன் தலைமையில் சப் இன்ஸ்பெக்டர் மகேந்த் மற்றும் போலீசார் என மூன்று தனிப்படைகள் அமைக்கப்பட்டு போலீசார் கேரளா மாநிலத்திற்கு சென்று தேடி வந்தனர். அப்போது கொலையாளி மணிகண்டன் கேரளா மாநிலம் கொல்லம் மாவட்டத்தில் பதுங்கி இருப்பதாக களியக்காவிளை இன்ஸ்பெக்டர் பரமேஸ்வரனுக்கு தகவல் கிடைத்தது. உடனடியாக இன்ஸ்பெக்டர் பரமேஸ்வரன் தலைமையிலான தனிப்படை சேரளா மாநிலம் கொல்லம் மாவட்டம் சென்று தேடி வந்தனர். போலீசார் தன்னை பிடிக்க வரும் தகவல் அறிந்த மணிகண்டன் உடனடியாக அங்கிருந்து திரும்பி குமிரி மாவட்டம் வந்து இரணியல் கோர்ட்டில்சரண்அடைந்தார். போலீசார் காவல் நிலையம் கொண்டு வந்து விசாரித்து வருகின்றனர்.

தேவர் குருபூஜை ஜெயந்தி விழாவை முன்னிட்டு கமுதி கோட்டைமேட்டில் மாபெரும் கலைநிகழ்ச்சி

ராமநாதபுரம் மாவட்டம், கமுதி அருகே கோட்டைமேடு கிராமத்தில் பசும்பொன் உ. முத்துராமலிங்கத் தேவர் திருமகனாரின் 119வது ஜெயந்தி விழா மற்றும் 64 வது குருபூஜையை முன்னிட்டும், மாமன்னர்கள் மருது பாண்டியர்களின் 225வது குருபூஜையை முன்னிட்டும், கிராமப் பொதுமக்கள் சார்பில் மாபெரும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

இதன்படி, வரும் செவ்வாய்க்கிழமை (27ம் தேதி) ஆடல், பாடல் நிகழ்ச்சியுடன் விழா தொடங்குகிறது. புதன்கிழமை மாபெரும் அன்னதானம் நடைபெறுகிறது. தொடர்ந்து வியாழக்கிழமை வள்ளி திருமண நாடகம் நடைபெற உள்ளது. இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை கோட்டைமேடு கிராமப் பொதுமக்கள் செய்து வருகின்றனர் என்று விழாக் குழுவினர் தெரிவித்தனர்.

சுசீந்திரம் கொள்ளையில் மேலும் 3 பேர் கைது



சுசீந்திரம் அருகே உள்ள பள்ளம் அன்னை நகர் பகுதியிலனைசார்ந்தவர்வின் சென்ட் சேவியர் சீலன் சவுதியில் உள்ளார் இவரது மனைவிஜூஓட் அமலா இவர் சென்னையில் உள்ளதனதுபிள்ளைகளை பார்க்க சென்றிருந்தார் இதை பயன்படுத்தி கடந்த 3.10.2026 அன்று அடையாளம் தெரியாத நபர்கள் வீட்டின் கதவை உடைத்து 55 பவுன் நகைகளை திருடி சென்றனர் இது குறித்து கன்னியாகுமாரி டிஎஸ்பி பிரகாஷ் தலைமையில் 2 தனிப்படைகள் அமைக்கப்பட்டு விசாரணை நடந்தது சம்பவம் நடந்த வீட்டில் உளியால் கதவு உடைக்கப்பட்டு இருந்தது பழைய கொள்ளையர்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் போலீசார் விசாரணை மேற்கொண்டனர் சுமார் 60 சிசி டிவி கேமராக்கள் ஆய்வு செய்யப்பட்டன டவர் டம்ப் தொழில்நுட்பம் மூலமாக சரித்திர குற்றவாளிகள் பற்றி விசாரணை நடந்தது இதில் குளச்சல் பிஷப் லியோ நகரைச்சார்ந்த சகாய ஜெனித் மோன்மற்றும்துாத்துக்குடி மினி சகாயபுரத்தை சேர்ந்த ஆக்னால் ஆகியோர் கொள்ளைசம்பவத்தில் ஈடுபட்டது தெரியவந்தது சகாய ஜெனித் மோனை கடந்த 7ஆம் தேதி கைது செய்து சிறையில் அடைத்தனர் அவரிடம் இருந்து பதிவு எண் இல்லாத பைக் இரும்பு கம்பி உளி ஆகியவற்றை பறிமுதல் செய்தனர் மேலும் ஆக்னரை தேடி வந்த நிலையில் இவர் ஏற்கனவே வேறொரு குற்ற வழக்கில் கைதாகி பாளையில் சிறையில் இருப்பது தெரியவந்தது இதை அடுத்து அவரை காவலில் எடுக்க முடிவு செய்தனர் அதன்படி நேற்று காவலில் எடுத்து விசாரித்தனர் இதில் அவரிடமிருந்து முதலில் 30 பவுன் நகைகளை மீட்டனர் பின்னர் விசாரணையில் ஆக்னல் மனைவி சந்தனமாரிடம் நகை இருப்பது தெரிய வந்தது இதை யடுத்து அவரையும் கைது செய்தனர் மேலும் இதில் தொடர்பு உடைய ஆக்கினால் சகோதரர் லக்வின் என்பவரையும் கைது செய்துள்ளனர் மேலும் ரூபாய் 5 லட்சத்து 25,000 பறிமுதல் செய்துள்ளனர் கைது செய்யப்பட்ட நபர்களிடம் விசாரணை நடந்து வருகிறது மேலும் யாருக்காவது இதில் தொடர்பு உள்ளதா என்பது பற்றியும் விசாரணை நடந்து வருகிறது திருட்டு வழக்கினைவிசாரணை நடத்தி விரைந்து பிடித்த தனிப்படை போலீசாரை உயர் அதிகாரிகள் பாராட்டினர்

சென்னை அப்பல்லோ மருத்துவமனை சார்பில் ஈரோட்டில் தலை மற்றும் கழுத்துக்கான சிறப்பு சிகிச்சை முகாம்

ஈரோடு அக் 25

ஈரோடு காளை மாடு அருகே உள்ள அப்பல்லோ மெடிகேர் ஆஸ்பத்திரி செயல்படுகிறது இந்த ஆஸ்பத்திரியில் சென்னை அப்பல்லோ மருத்துவமனை சார்பில் தலை மற்றும் கழுத்துக்கான சிறப்பு சிகிச்சை முகாம் நடந்தது. இதில் ஏராளமானவர்கள்கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர். சென்னை அப்பல்லோ மருத்துவமனையின்தலைகழுத்துமற்றும் சீரமைப்பு அறுவை சிகிச்சை துறை மூத்த நிபுணர் டாக்டர் பேராசிரியர் தீபக் பாலசுப்பிரமணியம் தலைமை தாங்கி நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து ஆலோசனை வழங்கினார்.

இது பற்றி டாக்டர் தீபக் பாலசுப் பிரமணியம் கூறியதாவது தலை மற்றும் கழுத்து சார்ந்த பாதிப்புகள் பேசுதல் மற்றும் விழுங்குதல் போன்ற அடிப்படை செயல்பாடுகளுக்கும் கூடுதலாக ஒட்டு மொத்த வாழ்க்கை திறனையும்



கணிசமாக பாதிக்கும். எனவே நோயை துல்லியமாக கண்டறிந்து சரியான சிகிச்சை முறையான தீர்மானிக்க சிறப்பு மருத்துவரால் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படும் பரிசோதனை மிகவும் அவசியமாகும். இத்தகைய முகாம்கள் மூலம் ஈரோடு மற்றும் அதை சுற்றி உள்ள பகுதிகளில் உள்ள நோயாளிகளுக்கு சிறப்பான மருத்துவ பலன்கள் எளிதாக கிடைக்கும். ஈரோட்டில் நடந்த இந்த மருத்துவ முகாம் அனுபவிக்க சிறப்பு மருத்துவர்கள் சேவைகள் மற்றும் கசக்கும் அமைவிடர்களுக்கு அருகிலேயே கிடைப்பதை சாத்தியமாக்குகிறது . இது தேவைப்படும்போது மேம்பட்ட மருத்துவ சேவைகளை மக்கள் பெறுவதை இது எளிதாக்குகிறது. இதன் மூலம் நோய்களை முன்கூட்டியே கண்டறிதல் சிகிச்சை குறித்து நோயாளிகள் முடிவெடுப்பதை எளிதாக்குகிறது. இவ்வாறு கூறினார். பேட்டியின் போது அப்பல்லோ மருத்துவமனை பாலாஜி உடன் இருந்தார்.

கந்திலி ஒன்றியத்திற்கு உட்பட்ட எலவம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் பள்ளி மேலாண்மைக் குழு புதிய பொறுப்பாளர்கள் நியமனம்



திருப்பத்தூர்:அக்:25, திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி ஒன்றியத்திற்கு உட்பட்ட எலவம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் 2026 2028 க்கான பள்ளி மேலாண்மைக் குழு புதிய பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். பள்ளிக் கல்வித்துறை மூலம் கொண்டு வரப்பட்ட பள்ளி மேலாண்மைக் குழு மறு கட்டமைப்பு நடைப்பெற்றது. இந்நிலையில் எலவம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளின் பெற்றோர்களின் வாக்கெடுப்பின் மூலம் தேர்வு செய்யப்பட்டனர். இந்த மறு கட்டமைப்பின் கூட்டமானது தலைமை யாசிரியர் விஜயகுமாரி தலைமையில் நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் மேனகா விவேகானந்தன் முன்னிலை வகித்தார்.புதிய பொறுப்பாளர்களாக தலைவர் சித்ரா, துணைத் தலைவர் துர்கா, செயலாளர் தலைமையாசிரியர் விஜயகுமாரி, பெற்றோர் உறுப்பினர்கள் வேண்டாமணி, நந்தினி, ரோஜா, சரன்யா, பிரியா, பூவிதா, மணிமேகலை, சுமித்ரா, அருட்செல்வி, கலாவதி, கனகா, பானுப்பிரியா, ஆசிரியர் விஜயகுமார், கல்வியாளர் ரஜினி, சுய உதவிக்குழு பூங்கொடி, முன்னாள் மாணவர்கள் மதுமதி, ரெஜினா, மஞ்சுளா, ஏழுமலை ஆகியோர் பொறுப்புகளுக்கு நியமிக்கப்பட்டனர். புதிய பொறுப் பாளர்களுக்கு பள்ளியின் தலைமையாசிரியர்விஜய குமாரி, மு. ஊராட்சி மன்ற தலைவர் மேனகா விவேகனந்தன் ஆகியோர் இந் நிகழ்ச்சியில் ஆங்கில ஆசிரியர் செல்வகுமார், கணித ஆசிரியர் விஜியகுமார், வேலு, அறிவியல் ஆசிரியர் சுரேஷ்,உடற்கல்வி ஆசிரியர் வீரமணி, ஆண்டாள், விஜியலட்சுமி, மேகலா மற்றும் மாணவ மாணவியர் பெற்றோர்கள் என ஐம்பதுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

குழந்தைகள் இல்லங்களுக்கு முன்மாதிரியான சேவை விருது: மதுரை ஆட்சியர் அறிவிப்பு

மதுரை

குழந்தைகள் நலனைப் பாதுகாப்பதில்சிறப்பாகச் செயல்படும் குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களுக்கு, நவம்பர் 14ம் தேதி குழந்தைகள் தினத்தன்று சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் 'முன்மாதிரியான சேவை விருதுகள்' வழங்கப்பட உள்ளன.

இதன்படி, மதுரை மாவட்டத்தில் இளைஞர் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015ன் கீழ் பதிவு செய்து செயல்படும் குழந்தைகள் பராமரிப்பு நிறுவனங்கள் விண்ணப்பிக்கலாம்.

அரசின் கீழ் இயங்கும் குழந்தைகள் இல்லங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் கீழ் செயல்படும் குழந்தைகள் இல்லங்கள், சட்டத்துடன் முரண்பட்டதாகக் கருதப்படும் குழந்தைகளுக்கான இல்லங்கள் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு என நான்கு பிரிவுகளுக்கு தலா ரூ.1 லட்சம் பரிசுத் தொகையுடன் விருது வழங்கப்பட உள்ளது. மொத்தப் பரிசுத் தொகை ரூ.4 லட்சமாகும்.

தகுதியுள்ள நிறுவனங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் கருத்துருவினை விண்ணப்பங்களை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, 3வது தளம், கூடுதல் கட்டிடம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், மதுரை – 625 020 என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது அஞ்சல்மூலமாகவோஅனுப்பவேண்டும். விண்ணப்பங்கள் மாவட்ட அளவிலான தேர்வுக்குழுவின் பரிந்துரைக்குப் பிறகு மாநில அளவிலான தேர்வுக்குழுவால் பரிசீலிக்கப்பட்டு விருதுக்குத் தேர்வு செய்யப்படும். விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதிக்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

தருமபுரியில் நாம் தமிழர் கட்சியின் சார்பில் தமிழக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்



தருமபுரி அக்டோபர்25 தருமபுரி ஒருங்கிணைந்த மண்டலம் நாம் தமிழர் கட்சியின் சார்பில் தமிழக அரசை கண்டித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் நாம் தமிழர் கட்சியினர் மீது பொய் வழக்கு தொடுத்து சிறைப்படுத்திய தமிழக அரசின்அடக்குமுறையை கண்டித்து கண்டன கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் அனைவரும் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மோகன், சிவகுமார், திலீப், ரகு, சாந்தலட்சுமி ,அனிதா, அர்ச்சனா, பழனியம்மாள் மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு தமிழக அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குமரி மாவட்ட பள்ளி மேலாண்மைக்குழு மறு கட்டமைப்பு கூட்டம்

கலெக்டர் தலைமையில் நடைபெற்றது



நாகர்கோவில், அக்.25 கன்னியாகுமரி மாவட்ட பள்ளி கல்வித்துறையின் சார்பில், நாகர்கோவில் எஸ்.எல்.பி. அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மேலாண்மைக்குழு மறு கட்டமைப்பு கூட்டம் நேற்று நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார். தொடர்ந்து அவ பேசுகையில்: கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட அரசு பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதி, அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், மாணவர் சேர்க்கையை அதிகரிக்க உதவுதல், இடைநிற்கும் மாணவர்களை கண்டறிந்து அவர்களை மீண்டும் பள்ளியில் சேர்க்க உதவுதல், பள்ளி வளர்ச்சி திட்டம் தயாரித்தல், பள்ளி செயல்பாடுகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திகொள்ளுதல், மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்சார்ந்தநிகழ்வுகளில் கவனம் செலுத்துதல், சரியான நேரங்களில் குழு கூட்டங்களை கூட்டி ஆக்கப்பூர்வமான தீர்மானங்களை நிறைவேற்றுதல், மாணவ மாணவியர்களுக்கு கற்றல் கற்பித்தல் சார்ந்த உதவிகள் உள்ளிட்ட வசதிகளை செய்திட பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யபட்டுள்ளனர்.

தேர்வு செய்யப்பட்ட குழு உறுப்பினர்கள் தங்களுடைய பணி முதன்மையானது என்பதை உணர்ந்து முழு அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கூறினார்.

தொடர்ந்து புதிதாக தேர்வு செய்யப்பட்ட பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கிய தோடு, இரண்டு ஆண்டு கால பணிக்காக தெரிவு செய்யப்பட்ட பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்களோடு உறுதி மொழியும் எடுத்துக் கொண்டார்கள்.

நடைபெற்றகூட்டத்தில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரின்ஸ் ஆரோக்கிய ராஜ், நாகர் கோவில் கல்வி மாவட்ட அலுவலர் ஜெயராஜ், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், முன்னாள் மாணவ உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

அகரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு கூட்டம்!

அகரம், அக்டோபர் 25

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் ஒன்றியத்திற்கு உட்பட்ட அகரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் இன்று பள்ளி மேலாண்மைக் குழு (SMC – School Management Committee) மறுகட்டமைப்பு கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டம் பள்ளியின் தலைமை ஆசிரியர்விஜய குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் பள்ளி மேலாண்மைக் குழுவின் புதிய தலைவர், துணைத்தலைவர்மற்றும் உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் பணி நடைபெற்றது. இதில் பள்ளி மேலாண்மை குழுவின் தலைவர் திருமதி.உமா பச்சையப்பன் மற்றும் துணைதலைவர்கவிதாஅருள் மற்றும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் இதைத் தொடர்ந்து



பள்ளியின் வளர்ச்சி, மாணவர்களின் கல்வித்தரம் மேம்பாடு, அடிப்படை வசதிகள் மற்றும் பள்ளியின் செயல்பாடுகளில் பெற்றோர்கள் மற்றும் சமூகத்தினரின் பங்களிப்பை அதிகரிப்பது உள்ளிட்ட நோக்கங்களுடன் பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு நடைபெற்றது. இக்கூட்டத்தில் பெற்றோர்கள் மற்றும் தொடர்புடைய உறுப்பினர்கள் கலந்து கொண்டு, பள்ளியின் முன்னேற்றத்திற்கான தங்களது பங்களிப்பை வழங்கினர். இந்த கூட்டத்தில் பள்ளியின் ஆசிரியர் மற்றும் ஆசிரியைகள் பெற்றோர்கள் மற்றும் பொது மக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்



முஞ்சிறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை

ரூ.83 ஆயிரம் பறிமுதல்; 10 காண்ட்ராக்டர்களிடமும் விசாரணை





மார்த்தாண்டம், அக்.25 தமிழகம் முழுவதும் நேற்று முன்தினம் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் தனி தனி குழுக்களாக சோதனையில் ஈடுபட்டனர். அதன்படி குமரி மாவட்டம் கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட முஞ்சிறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நேற்று பிற்பகல் முதல் மாவட்ட லஞ்ச ஒழிப்புத்துறை கூடுதல் போலீஸ் சுப்பிரண்ட் எஸ்கால் தலைமையில் இன்ஸ்பெக்டர் ஜென்சி மற்றும் போலீசார் அதிரடி சோதனை நடத்தினர். அலுவலகம் உள்ளே லஞ்ச ஒழிப்பு போலீசார் உள்ளே வந்தவுடன் நுழை வாயில்கள், கதவுகள் அனைத்தும் மூடப்பட்டன. மேலும் அலுவலகத்திற்குள் இருந்த பொதுமக்கள் அனைவரும் தங்களது பணிகளை பாதியிலேயே நிறுத்தும் படி அறிவுறுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டனர்.

அதன் பின்னர் வெளிநபர்கள் யாரும் அலுவலகத்திற்கு உள்ளே செல்ல அனுமதிக்கப்பட வில்லை. மேலும் உள்ள இருந்த அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் செல்போன்களையும் போலீசார் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அலுவலகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தீவிர சோதனை நடைபெற்றது. ஒவ்வொரு ஊழியர்களின் இருக்கை, மேஜை மற்றும் கழிவறையென அனைத்து இடங்களையும் விடாமல் போலீசார் சோதனையிட்டனர்.

இந்த அதிரடி சோதனையில் அங்கு பணியில் இருந்த ஊழியர்களின் கூகுள் பே கணக்குகளில் கணக்கில் வராத பணம் 55 ஆயிரம் மற்றும் கைகளில் கணக்கில் வராத பணம் 28 ஆயிரம் ரூபாய் ரொக்கமாக கைப்பற்றப்பட்டது. இந்த சோதனை நடந்துவரும் வேளையில் அலுவலகத்திற்கு வந்த 10 க்கும் மேற்பட்ட ஒப்பந்ததாரர்களையும் போலீசார் விசாரணை வளையத்திற்குள் கொண்டு வந்து அவர்களிடமும் தீவிர விசாரணை நடத்தினர். இந்த சோதனை இரவு 10 மணி வரையிலும் நடைபெற்றது. தொடர்ந்து வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

நாகர்கோவிலில் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரை அரிவாளால் வெட்ட முயற்சி; 3 பேர் கைது

நாகர்கோவில், அக்.25 நாகர்கோவில் கோட்டார் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பெரியவிளை பகுதியில் கோட்டார் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் ராஜன் தலைமையிலான போலீசார் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு சாலையின் நடுவே நின்றுகொண்டு பொது மக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறு செய்த நவீன் (எ) அலெக்ஸ், பிரபீன், ஜெனித் மற்றும் பரசுராமன் ஆகிய 4 பேரையும் காவல்துறை தரப்பு தட்டிக்கேட்டது. இதையடுத்து அந்த 4 பேரும் போலீசாரை தகாத வார்த்தைகளால் திட்டி அவமானப்படுத்தியதுடன், மறைத்து வைத்திருந்த அரிவாளால் சார்பு ஆய்வாளர் ராஜனின் கழுத்தை நோக்கி வெட்ட முயன்றுள்ளனர். அவர் சுதாரித்து விலகியதால் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியதாக கூறப்படுகிறது.

மேலும் அப்பகுதியில் அரிவாளை சுழற்றி பொது மக்களை மிரட்டி கடைகளை அடைக்கச் செய்து பேக்குவரத்துக்கும் பொது அமைதிக்கும் பங்கம் விளைவித்த நவீன், பிரபீன் மற்றும் பரசுராமன் ஆகிய மூவரையும் போலீசார் மடக்கிப் பிடித்தனர். இதில் ஜெனித் என்பவர் தப்பியோடினார். அவரை தேடும் பணியில் போலீசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்தச் சம்பவம் குறித்து சார்பு ஆய்வாளர் ராஜன் அளித்த புகாரின் அடிப்படையில் பின் எஸ் சட்டப் பிரிவுகள் 296(பி), 109, 351(3) மற்றும் ஆயுதச்சட்டம் 25(1)(ஏ) இன் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

கிருஷ்ணகிரியில் நாதன் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் அதிநவீன ரோபோடிக் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை மையம் துவக்க விழா



கிருஷ்ணகிரி அக். 25: கிருஷ்ணகிரியில் புகழ் பெற்ற நாதன் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை சார்பில் மாவட்டத்தின் முதல் முறையாக அதிநவீன ரோபோட்டிக் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை மையம் துவக்க விழா கிருஷ்ணகிரி ஐ.எம்.ஏ ஹாலில் வெகு சிறப்பாக டாக்டர். செந்தில்நாதன் தலைமையில் நடைபெற்றது. இந்த அதிநவீன ரோபோட்டிக் இயந்திரத்தை எலும்பியல் சங்க துணைத் தலைவர் மீனாட்சி சுந்தரம், ஒருங்கிணைப்பு செயலாளர் பிரேம்நாத், கிருஷ்ணகிரி மாவட்ட இணை இயக்குனர் (பொறுப்பு) கோபிநாத், முன்னாள் டிஎம்ஓ அசோக்குமார், கிருஷ்ணகிரி எலும்பியல் சங்கத் தலைவர் ரவிக்குமார், சீனிவாசகவுடா மற்றும் பூபேஷ் உள்ளிட்ட கிருஷ்ணகிரி மாவட்ட எலும்பு நல சங்க தலைவர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தனர். இந்த ரோபோடிக் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை இயந்திரம் மூலம் சிகிச்சை செய்வதால் கால விரயம் இன்றி, மிகத் துல்லியமாகவும், குறைந்த இரத்த இழப்புகள், விரைவில் குணமடையும் வகையிலும், சிகிச்சைக்கு தகுந்த செலவுகளுடன், வலிகள் இன்றி, கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் மருத்துவ சேவை அறிந்து ஏஜ மூலம் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்வதால் விரைவில் குணமடைந்து அவர்கள் சொந்த வேலைக்கு செல்ல ஏதுவாக இது அமையும் என்றும், பொதுமக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் செந்தில்நாதன் கூறினார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மருத்துவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் ஏராளமானோர் 16 வருட அனுபவம் கொண்ட நாதன் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை டாக்டர் செந்தில்நாதனுக்கு பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொண்டனர். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மருத்துவமனை நிர்வாகிகள், மருத்துவர்கள், செவிலியர்கள், மற்றும் பணியாளர்கள் அனைவரும் சிறப்பாக செய்திருந்தனர்.

வேலாவள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியில் பள்ளி மறுகட்டமைப்பு குழுத் தலைவி, துணைத்தலைவி தேர்வு!



மத்தூர் அக் 25: கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட வேலாவள்ளி அரசு உயர்நிலைப் பள்ளியில், பள்ளித் தலைமை ஆசிரியர், பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் முன்னிலையில் பள்ளி மறுகட்டமைப்புக் குழு விற்கான தலைவி மகாலட்சுமி மற்றும் துணைத் தலைவி சுமதி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்தத் தேர்வில் பள்ளியின் வளர்ச்சி, மாணவர்களின் கல்வி முன்னேற்றம் மற்றும் பள்ளிக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் உள்ளிட்ட அம்சங்கள் தொடர்பாகக் குழுவின் பங்களிப்பு குறித்து வலியுறுத்தப்பட்டது.

பள்ளியின் வளர்ச்சியில் பெற்றோர்கள் மற்றும் ஊர் பொதுமக்களின் பங்களிப்பை அதிகரித்து, மாணவர்களுக்குச் சிறந்த கல்விச் சூழலை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் மறுகட்டமைப்புக் குழு சிறப்பாகச் செயல்படும் என வலியுறுத்தப்பட்டது.

மாற்று திறனாளிகள் கலந்து கொண்ட போலியோ ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி



ஈரோடு அக் 25 போலியோ ஒழிப்பு தினம் நேற்று கடைபிடிக்கப்பட்டது. இதை யொட்டி ஈரோடு மத்திய ரோட்டரி சங்கம் சார்பில் மாற்று திறனாளிகள்கலந்துகொண்ட விழிப்புணர்வு பேரணி நடந்தது.

ஈரோடு கலெக்டர் அலுவலகவளாகத்தில்இருந்து புறப்பட்ட இந்த பேரணியை ஆட்சியர் கந்த சாமி கொடி அசைத்து தொடங்கி வைத்தார். இந்த பேரணி பெருந்துறை ரோடு வழியாக பழைய பாளையத்தை அடைந்தது. அங்கு கேக் வெட்டி அனைவருக்கும் வழங்கப்பட்டது.

பேரணியில் கலந்து கொண்ட மாற்று திறனாளிகள் போலியோ ஒழிப்பு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி சென்றனர்.

இதில் ஈரோடு மத்திய ரோட்டரி சங்க தலைவர் ஞான முருகன் செயலாளர் கார்த்தி பொருளாளர் அய்யப்பன் மற்றும் நிர்வாகிகள்கலந்து கொண்டனர்.

புதுக்கடையில் சாலையோரம் நின்ற தொழிலாளி மீது பைக் மோதல்; படுகாயம்

புதுக்கடை, அக்.25 புதுக்கடை அருகே உள்ள அம்பாள் நகர் பகுதியை சேர்ந்தவர் சுப்பையா பிள்ளை (72). இவர் புதுக்கடை பஸ் நிலைய பகுதியில் பூக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறார். நேற்று சுப்பையா பிள்ளை பஸ் நிலைய சாலையோர பகுதியில் நின்று கொண்டு இருந்தார். அப்போது வேகமாக வந்த பைக் ஒன்று சுப்பையா பிள்ளை மீது மோதியது. இதில் அவர் தூக்கி வீசப்பட்டு, தலை உட்பட உடலில் பல் வேறு இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டது. உடனடியாக அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு நாகர்கோவில் பகுதியில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். இது குறித்த அவரது மகள் பிரியா (38) என்பவர் புதுக்கடை போலீசில் புகார் அளித்தார். புகாரின் பேரில் புதுக்கடை போலீசார் பைக் கால் மோதி விபத்தை ஏற்படுத்திய பார்த்திபபுரம் பகுதியை சேர்ந்த ஜெகன் (28) என்பவர் மீது வழக்கு பதிவு செய்தனர். இந்த விபத்தில் ஜெகனுக்கும் தலையில் காயம் ஏற்பட்டு அவர் குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

காவேரிபட்டிணத்தில்காணாமல் போன சிறுவனை 4 மணி நேரத்தில் மீட்பு

காவேரிப்பட்டினம் போலீசாருக்கு பாராட்டு. கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட குரும்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பிரபா என்பவர், தனது மகன் காணாமல் போனது தொடர்பாக 24.10.2026 அன்று காலை சுமார் 08.00 மணியளவில் காவேரிப்பட்டணம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில், காவேரிப்பட்டணம் காவல் நிலைய குற்ற எண் 396/2026 யூ/எஸ். பாய் மிஸ்சிங் ஆக வழக்கு பதிவு செய்து, கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அனிதா அவர்களின் உத்தரவின்பேரில், காவேரிப்பட்டணம் காவல் ஆய்வாளர் சங்கர் தலைமையில் உடனடியாகத் தனிப்படை அமைத்து தனிப்படை போலீசார், அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளைச் சேகரித்து ஆய்வு செய்ததில், காணாமல் போன சிறுவன் கிருஷ்ணகிரியிலிருந்து பெங்களூரு சென்றது தெரியவந்தது. இதையடுத்து, தனிப்படை போலீசார் விரைந்து பெங்களூரு சென்று, கே.ஆர்.புரம் மார்க்கெட் பகுதியில் சுற்றித்திரிந்த சிறுவனை மீட்டனர். அப்பகுதியில் இருந்த பெண் ஒருவர் சிறுவனிடம் விசாரித்து, அவரது பெற்றோருக்குத் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்த தன் அடிப்படையில், காவல்துறையினர் உடனடியாகச் செயல்பட்டு சிறுவனைப் பத்திரமாக மீட்டனர். புகார் அளிக்கப்பட்ட 4 மணி நேரத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு காணாமல் போன சிறுவனை மீட்ட காவேரிப்பட்டணம் போலீசாரின் துரித நடவடிக்கையை சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் பாராட்டு தெரிவித்தனர்.



திண்டுக்கல் அங்குவிலாஸ் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில், திண்டுக்கல் மாவட்ட நிர்வாகம், பொதுநூலக இயக்ககம் மற்றும் திண்டுக்கல் இலக்கியக் களம் இணைந்து நடத்தும், 13 வது புத்தகத் திருவிழாவில், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்களின் பார்வைக்கு காட்சிப்படுத்துவதற்கென "இஸ்ரோ ஸ்பேஸ் ஆன் வீல்ஸ் (ISRO Space on Wheels)" பேருந்தினை தொடங்கி வைக்கப்பட்ட நிகழ்வில், ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில், மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி அவர்களுக்கு வருகின்ற 30.10.2026 அன்று இரவு 11.51 மணிக்கு விண்வெளியில் ஏவப்பட உள்ள "GSLV F18 NVS03" ராக்கெட்டின் புகைப்படம் வழங்கினார்கள். உடன் முதன்மைக் கல்வி அலுவலர் செல்வக்குமார், இஸ்ரோ நூலக அலுவலர் குமார், மாவட்டக் கல்வி அலுவலர்கள் ஜான்பிரிட்டோ, அமுதா, சண்முகநாதன், ஜெயந்தி, இலக்கியக் களம் தலைவர் பேராசிரியர் மனோகரன் உட்பட பலர் உள்ளனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!



மதுரை அண்ணா நகரில் தமிழ் ஷாப்பிங் மால் மக்களின் பேராதரவுடன் ஐந்தாவது கிளை நிர்வாக இயக்குனரின் பெற்றோர் அழகர் பானுமதி திறந்து வைத்தனர். அருகில் நிர்வாக இயக்குனர் அறிவழகன் சகோதரர் மதியழகன் மற்றும் குடும்பத்தினர் சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

மதுரை மாவட்டத்தில் 69,730 மாணவர்களுக்கு காலை உணவு திட்டம்: "வயிறாரச் சாப்பிட்டு மனதாரப் படிக்கிறோம்" மாணவர்கள் மகிழ்ச்சி



மதுரை: அரசுப் பள்ளி மாணவர்களின் ஊட்டச்சத்து குறைபாட்டைப் போக்கி, கற்றல் திறனை மேம்படுத்தும் நோக்கில் செயல்படுத்தப்படும் 'பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம்' மதுரை மாவட்டத்தில்மாணவர்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் மூலம் மாவட்டத்தில் 6 முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் 69,730 மாணவ, மாணவியர் நாள்தோறும் சத்தான காலை உணவைப் பெற்று வருகின்றனர்.

தமிழக அரசின் முன்னோடித் திட்டமான காலை உணவுத் திட்டம், ஆரம்பப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வந்த நிலையில், தற்போது அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6 முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன் மாநில அளவிலான விரிவாக்கத்தை கடந்த செப்டம்பர் 22ம் தேதி சென்னையில் முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

ரூ.724 கோடி நிதி ஒதுக்கீடு

இத்திட்டத்தின் விரிவாக்கத்தின் மூலம் மாநிலம் முழுவதும் 15,454 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் சுமார் 15.30 லட்சம் மாணவர்கள்கூடுதலாகப் பயனடைந்து வருகின்றனர். இதற்காக நடப்பு நிதியாண்டில் கூடுதலாக ரூ.217.63 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.724 கோடியாக உள்ளது.

மதுரை மாவட்டத்தில் ஊரகப் பகுதிகளில் 400 பள்ளிகள், நகர்ப்புறப் பகுதிகளில் 174 பள்ளிகள் என மொத்தம் 574 பள்ளிகளில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதனைச் சீராகச் செயல்படுத்தும் வகையில், கடந்த செப்டம்பர் 11ம் தேதி அனைத்து பள்ளிகளிலும் முன்னேற்பாட்டுச் சோதனை நடத்தப்பட்டது. மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உள்ளிட்ட அமைப்புகள் மூலம் சுகாதாரமான, சுவையான காலை உணவு தயாரித்து மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது.

"பாடங்களைக் கவனிக்க புத்துணர்ச்சி கிடைக்கிறது"

மதுரை மாவட்டம், தும்பைப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் 8ம் வகுப்பு படிக்கும் மாணவன் ஆகாஷ்குமார் கூறுகையில், "முன்பெல்லாம் காலையில் உணவு தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டால், சாப்பிடாமலேயே பள்ளிக்கு வர வேண்டிய நிலை இருந்தது. இதனால் வகுப்பில் பசியுடன் அமர்ந்து பாடங்களைக் கவனிக்க முடியாமல் சோர்வு ஏற்படும். தற்போது பள்ளிக்கு வந்தவுடன் சூடான, சத்தான காலை உணவு கிடைக்கிறது. வயிறாரச் சாப்பிடுவதால் புத்துணர்ச்சியுடன் பாடங்களைக் கவனிக்க முடிகிறது. இத்திட்டத்தை வழங்கிய முதலமைச்சருக்கு நன்றி" என்றார்.

அதே பள்ளியில் 7ம் வகுப்பு பயிலும் மாணவி இசைப்பிரியா கூறுகையில், "காலை நேர அவசரத்தில் சில நேரங்களில் சரியாகச் சாப்பிட முடியாமல் போகும். தற்போது பள்ளியிலேயே சத்தான உணவு கிடைப்பதால் உற்சாகமாகப் படிக்க முடிகிறது. குறிப்பாக, காலை நேரத்தில் சமையல் செய்யும் எனது அம்மாவின் வேலைப்பளுவும் குறைந்துள்ளது. நன்றாகப் படித்து அதிக மதிப்பெண்கள் பெற்று உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது" என்றார்.

மாணவர்களின் நலனுக்கு முக்கியத்துவம்

மாணவர்களின் பசியைப் போக்குவதுடன், பள்ளி வருகையை அதிகரிக்கவும், உடல் மற்றும் மன வளர்ச்சியை மேம்படுத்தவும் இத்திட்டம் உதவுவதாகப் பெற்றோர்களும் மாணவர்களும் தெரிவிக்கின்றனர். கல்வியில் மாணவர்கள் முழு ஈடுபாட்டுடன் செயல்படுவதற்கு ஊட்டச்சத்து நிறைந்த காலை உணவு முக்கியப் பங்காற்றுகிறது.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.